முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (24.3.2025) முகாம் அலுவலகத்தில், வேல்ஸ் பல்கலைக்கழகத்தின் வேந்தர் டாக்டர் ஐசரி கே.கணேஷ் குடும்பத்தினருடன் சந்தித்து, தனது மகள் திருமண விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (24.3.2025) தலைமைச் செயலகத்தில், கன்னியாகுமரி மாவட்டம் அணுக்கனிம சுரங்க எதிர்ப்பு நிர்வாகிகள் அருட்பணி டன்ஸ்டன், அருட்பணி சில்வெஸ்டர் குரூஸ், அருட்பணி. ஜான் நிக்சன், அருள் ஆனந்தன், கேப்டன் ஜான்சன், சுதர்சன், நாகராஜன், மகேஷ், சிபில், சித்திக், கிறிஸ்டோபர், ஜெயசுந்தரம், பெர்லின், பேபி ஜான் ஆகியோர் சந்தித்து, மணவாளகுறிச்சியில் கனிம சுரங்க விரிவாக்கப் பணியினை தடுத்து நிறுத்திட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு கோரிக்கை மனு அளித்தனர். இச்சந்திப்பின்போது, அமைச்சர் தங்கம் தென்னரசு, சட்டமன்ற உறுப்பினர்கள் மனோ தங்கராஜ், எஸ். ராஜேஷ் குமார், இனிகோ இருதயராஜ், ஜெ.ஜெ. பிரின்ஸ், திருமதி தாரகை கத்பர்ட், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் மகேஷ், மீனவரணி செயலாளர் ஜோசப் ஸ்டாலின் ஆகியோர் உடனிருந்தனர்.

முதலமைச்சரிடம் அனுமதி கேட்டிருக்கிறோம்!

375 பேரூராட்சிகளுக்கும் 100 நாள் வேலைத் திட்டம் கொண்டுவர நடவடிக்கை!

சட்டப்பேரவையில் – அமைச்சர் கே.என்.நேரு தகவல்!

சென்னை, மார்ச் 25 -

சட்டப்பேரவையில் உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் கே.என்.நேரு, முதலமைச்சரிடம் அனுமதி பெற்று, 375 பேரூராட்சிகளுக்கும் 100 நாள் வேலைத் திட்டத்தைக் கொடுத்திட நடவ டிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிட்டார்.

இது குறித்து பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:

கே.மாரிமுத்து : திருத்துறைப் பூண்டி தொகுதி, கோட்டூர் ஊராட்சியுடன் அருகில் உள்ள ஊராட்சிகளை இணைத்து பேரூராட்சியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

அமைச்சர் கே.என். நேரு: தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு அருகிலுள்ள ஊராட்சிகளை நகர்ப்புற உள்ளாட்சிகளுடன் இணைப்பது குறித்து அமைக்கப்பட்ட மாநில அளவிலான குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், 375 ஊராட்சிகள், மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகளோடு இணைக்க உத்தேச அறிக்கை வெளியிடப்பட்டது. திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஊராட்சிக்கு அருகிலுள்ள ஊராட்சிகளை கோட்டூர் ஊராட்சியோடு இணைத்து பேரூராட்சியாகத் தரமுயர்த்துவது குறித்து மாநில அளவிலான குழுவிற்கு எடுத்துச்செல்கையில், மாநில அளவிலான குழுவினால் பரிந்துரைக்கப்படவில்லை. இருப்பினும், இது போன்ற கோரிக்கைகள் வந்தவண்ணம் உள்ளதால்,

எதிர்காலத்தில் இக்கோரிக்கை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கே.மாரிமுத்து: முத்துப்பேட்டை பகுதிக்கு அரசு கலைக் கல்லூரி அறிவித்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு கோடானு கோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அமைச்சர் அவர்களின் பதிலைக் கேட்டேன். கோட்டூர் ஊராட்சி என்பது விவசாயத் தொழிலாளர்களை நிரம்ப கொண்டிருக்கிற பகுதியாகும். வணிக நிறுவனங்களோ, பொருளாதார வளர்ச்சியோ, பிற தொழில் நிறுவனங்களுடையவேலைவாய்ப்புகளோ இல்லாத காரணத்தினால், கிராம ஊராட்சியாகவே அது இருப்பதுதான் பொருத்தமானது என்று இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன். முத்துப்பேட்டை பகுதிக்கு குறிப்பாக கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்தான் குடிநீர் ஆதாரமாக இருக்கிறது. குறிப்பாக, திருத்துறைப்பூண்டி, கோட்டூர், முத்துப்பேட்டை போன்ற பகுதிகளுக்கு அதுதான் குடிநீர் ஆதாரமாக இருக்கிறது. எனவே, அந்த அடிப்படையில், திருத்து றைப்பூண்டி பேரூராட்சிப் பகுதியில் கிட்டத்தட்ட 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசிப்பதால் 20 இலட்சம் லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது. ஆனால், இப்போது நாள்தோறும் வெறும் 7 இலட்சம் லிட்டர் தான் தண்ணீர் அங்கே கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். எனவே, அந்தப் பகுதியில் குடிநீர் தட்டுப்பாடு நீண்டு கொண்டே இருக்கிறது என்பதனை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டுவருகிறேன்.

அமைச்சர் கே.என்.நேரு: ஏற்கெனவே, கோட்டூர் ஊராட்சியைச் சுற்றியிருக்கிற பகுதிகளை தரமுயர்த்தி, பேரூராட்சியாக ஆக்க வேண்டுமென்று அரசின் சார்பாக பரிந்துரைக்கப்பட்டது. ஆனால், குழுவால் அதை ஏற்றுக் கொள்ளப்படவில்லை. பிற்காலத்தில் அதைப் பற்றி பரிசீலிக்கலாம் என்றுதான் நான் பதில் சொல்லியிருக்கிறேன். உறுப்பினர் அவர்கள் அடுத்த கேள்விக்குச் சென்று, உடனடியாகக் குடிதண்ணீர் தேவை என்று சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக, குடிதண்ணீரைப் பொறுத்தவரை, திருவாரூர், நாகப்பட்டினம், தஞ்சை போன்ற மாவட்டங்களிலுள்ள பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்காக பல்வேறு திட்டங் கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. எனவே, திருத்து றைப்பூண்டியை பொறுத்தவரை, என்ன தேவை என்பதை ஆராய்ந்து, 20 இலட்சம் லிட்டர் குடிநீர் தேவை என்று சொல்லியிருக்கிறீர்கள். அதற்கான source, அதற்கு எங்கிருந்து தண்ணீர் எடுக்கிறார்கள்? அந்தளவுக்கு கொடுக்க இயலுமா என்பதையெல்லாம் அதிகாரிகளோடு கலந்துபேசி, அப்படிக் கொடுக்க இயலுமானால் உடனடியாகக் கொடுக்க முயற்சி எடுக்கப்படும். அப்படிக் கொடுக்க எந்த வாய்ப்பும் இல்லையென்றால், அதற்கான புதிய திட்டங்களை உருவாக்குவதற்கு என்ன முடியும்? அதற்கு எவ்வளவு செலவாகும் என்பதைக் கண்டறிந்து, அதற்கான ஏற்பாடுகளைச் செய்யலாம் என்ப தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கே.மாரிமுத்து: திருத்துறைப்பூண்டி நகராட்சி ஒரு பழமையான நகராட்சி. கிட்டத்தட்ட 10 கோடி ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ள நகராட்சி. கிட்டத்தட்ட 33 ஆயிரம் மக்கள்தொகை கொண்டிருக்கிற நக ராட்சி. அங்கு குடி யிருப்புகளே 8 ஆயிரத்திற்கும் மேல் இருக்கிறது. நகரமும் விரிவடைந்து கொண்டே வருகிறது. எனவே, எல்லா தகுதிகளும் இருக்கிற திருத்துறைப்பூண்டி நகராட்சியை இரண்டாம் நிலை நகராட்சியிலிருந்து முதல் நிலை நகராட்சியாகத் தரமுயர்த்த அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

அமைச்சர் கே.என்.நேரு: உறுப்பினர் அவர்கள் திருத்துறைப்பூண்டி நகராட்சியை தரமுயர்த்துவதைப் பற்றிக் கேட்டிருக்கிறார்கள். அப்படி எல்லா தகுதிகளும் இருக்குமானால், இந்த ஆண்டே இப்போதே, இந்தச் சட்டமன்ற கூட்டத்திலே தரமுயர்த்துவது குறித்து அறிவிக்கப்படும் என்பதை உறுப்பி னர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எஸ்.பி.வெங்கடேஷ்வரன்: தருமபுரி மாவட்டத்தில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள், நகரத்தில் இணைப்பதாக ஒருசில ஊராட்சிகளின் பட்டியல் வெளி வந்தது. அந்தப் பகுதி மக்கள் உங்களுடைய கருத்தைக் கேட்டு, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஏ.ஜெட்டி அள்ளி, தடங்கம், தருமபுரி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட லக்கியம்பட்டி, சோகத்தூர் பகுதிகளிலுள்ள மக்கள் வேண்டாமென்று சொல்கிறார்கள். ஏனென்றால், கிராம ஊராட்சியில் நிறைய விவசாய நிலங்கள் இருக்கின்றன. அந்த விவசாய நிலங்களெல்லாம் பாதித்துவிடும். நகராட்சியில் நிறைய விவசாய நிலங்களை யெல்லாம் plot போட்டு flat ஆகிவிடும். அதனால், விவசாய நிலங்கள் பாதிக்காமல் என்னுடைய கருத்துகள் இல்லாமல் அந்த கிராம மக்களுடைய கருத்துகளைக் கேட்டு, அமைச்சர் அவர்கள் நல்ல முடிவு எடுப்பார் என்ற நம்பிக்கையோடு அறிய விரும்புகிறேன்.

அமைச்சர் கே.என்.நேரு: இந்தக் கேள்வி அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கான கேள்வியாகும். இந்தக் கேள்வி தனிப்பட்ட வெங்கடேஷ்வரன், தருமபுரிக்கானது அல்ல. சட்டமன்ற உறுப்பினர்கள் சில பேர் நான் குறிப்பாகச் சொன்னால் கந்தர்வக் கோட்டையை ஏன் பேரூராட்சியாகத் தரமுயர்த்தவில்லை என்று கேட்கிறார். பல இடங்களில் ஏன் நகராட்சியாகத் தரமுயர்த்தவில்லையென்று கேட்டிருக்கிறார்கள். நான் குறிப்பாக எந்த ஊராட்சியும் நகரத்தோடு இணைப்பதற்கு எங்களுக்கு ஒன்றும் தேவை என்பதல்லாம் அல்ல. அவர்கள் ஓரளவுக்கு இந்த 100 நாள் வேலைத் திட்டம் கிடைக்காத காரணத்தால் தான் விவசாயிகள் அதை இணைக்கக்கூடாதென்று பெரிய அளவிலே அதற்கான மறுப்பைத் தெரிவித்து வருகிறார்கள். நான் உங்களுக்கு சொல்கிறேன். நகராட்சி குறித்து இப்போது உறுப்பினர் மாரிமுத்து இப்போது பேசினார்; நகராட்சி நாள்தோறும் விரிவடைந்து கொண்டே இருக்கிறது. நாள்தோறும் எப்படி விரிவடைந்து கொண்டு வருகிறதென்றால், இந்த இடத்திலிருந்து ஒரு கிலோ மீட்டர் தள்ளி முதலிலே ஒரு வீடு கட்டுகிறார்கள். அந்த ஒரு கிலோ மீட்டருக்கு நாங்கள் குழாயும் போட வேண்டும்; தண்ணீரும் கொடுக்க வேண்டும்; சாக்கடை இணைப்பும் கொடுக்க வேண்டும்; அப்படி வருகிறபோது, நகரம் விரிவாகிக் கொண்டே வருகிறபோது அரசினுடைய திட்டங்களை நிறைவேற்றுவதற்கு எங்களுக்கு இடம் தேவை.

அரசாங்கத்திற்கு புறம்போக்கு நிலமாக இருந்தால் அதில் இலகுவாக இந்தத் திட்டங்களை நிறைவேற்ற முடியும். இன்னொன்றைச் சொல்கிறேன்; பக்கத்திலிருக்கிற, அருகிலே இருக்கிற ஒரு நகராட்சியிலே பாதாளச் சாக்கடைத் திட்டம் இருக்கிறது; LED light இருக்கிறது. சாலைகள் பராமரிக்கப்படுகிறது. பள்ளிக் கட்டடங்கள் சரியாக இருக்கிறது. அங்கன்வாடிக் கட்டடங்களும் சரியாக இருக்கிறது. ஆனால், அடுத்த கிராமம் என்று போகிறபோது, வசதி இல்லை. அந்தக் கிராமத்தில் இருக்கிறவர்கள் நாங்கள் மட்டும் வரி கட்டவில்லையா, எங்களுக்கு அந்தத் திட்டம் வரக் கூடாதா என்று எங்களிடம் கேட்கிறார்கள். இப்படி mixed response ஒருத்தர் வேண்டுமென்று கேட்கிறார்; ஒருத்தர் வேண்டாமென்று சொல்கிறார்கள்.

நான் ஒன்றைச் சொல்கிறேன்; அப்டியென்றால் 100 நாள் வேலைத் திட்டம் போகுமென்பது உங்கள் கருத்து. இந்த ஆண்டு 375 ஊராட்சிகளை இணைத்திருக்கிறோம். எனவே, அதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டு, அந்தக் குழுவிலே பலதரப்பட்ட வகையிலே, பலதரப்பட்ட மக்களிடம் பேசப்பட்டு, எந்தெந்த ஊராட்சி களைச் சேர்க்கலாம்; விவசாய மல்லாத ஊராட்சிகளைச் சேர்க்கலாமென்று குழு முடிவுசெய்து, 375 ஊராட்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இதிலேயும் அவர்களுக்கு objection இருக்குமானால் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொல்லப்பட்டு, மீண்டும் அந்தக் குழுவிலே அது பரிசீலிக்கப்படும். இந்த 100 நாள் வேலைத் திட்டத்தைப் பொறுத்தளவில் இந்த ஓராண்டு, ஏற்கெனவே நகர்ப்புறத்திலே ஒரு வார்டுக்கு ஓர் இடத்திலே மொத்தம் ஒரு 20 பேரூராட்சிகளை கொடுத்துக் கொண்டிருந்தோம். இன்றைக்கு அதையெல்லாம் நிறுத்திவிட்டு, இந்த 375 பேரூராட்சிகளுக்கும் இந்த 100 நாள் வேலைத் திட்டத்தைக் கொடுக்க வேண்டுமென்று முதலமைச்சரிடம் நாங்கள் அனுமதி கேட்டிருக்கிறோம். அப்படி வருமானால் அவர்களுக்கு எந்த பாதிப்பும் இல்லாமல் 100 நாள் வேலைத் திட்டத்தினை நகர்ப்புற உள்ளாட்சியிலிருந்து அந்த 100 நாள் வேலைத் திட்டத்தைக் கொடுப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதையும் தாண்டி நீங்கள் தேவையில்லையென்று சொன்னால், நீங்கள் எழுதிக் கொடுங்கள். ஆனால், நான் இன்னொன்றைச் சொல்கிறேன்; நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். இந்த ஊரோடு அந்த ஊரைச் சேர்த்தால் நாம் தலைவராக வர முடியாதென்று ஆட்களைக் கிளப்புகிறார்கள். இது ஒரு விஷயம். இதற்கு நான் பல உதாரணங்களைச் சொல்ல முடியும். அப்படிச் சொன்னால் அது தவறாகப் போய் விடும். எனவே, எல்லார்க்கும் எல்லாம் என்பது இந்த ஆட்சியினுடையது. யார் வேண்டுமானாலும் தலைவராக வரலாம். இந்த இடம் நமது strength majority ஆக நாம் தலைவராக வர முடியாதென்று ஆட்களைத் தட்டிவிட்டு பிரச்சினை செய்து கொண்டிருக்கிறார்கள். அதுபோன்று இருந்தால் கடைசிவரை ஒத்துக் கொள்ள மாட்டேன். அதைப் பார்த்துக் கொள்ளுங்கள்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

சாத்தான்குளம் தொகுதி

எழுவரை முக்கியில் 'சிப்காட்' தொழிற்பூங்கா அமைத்திட நடவடிக்கை!

சட்டப்பேரவையில் – அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா உறுதி!

சென்னை, மார்ச் 25- சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது பேசிய தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, "சாத்தான்குளம் வட்டம் - எழுவரை முக்கியில் 'சிப்காட்' தொழிற் பூங்கா அமைப்பதற்கான முயற்சிகளை கழக அரசு நிச்சயம் எடுக்கும்" என்று உறுதியளித்தார்.

கேள்வி நேரத்தின் போது நடைபெற்ற விவாதம் வருமாறு: -

செ. ஊர்வசி அமிர்தராஜ்: சாத்தான்குளம் வட்டம், எழுவரைமுக்கியில் சிப்காட் தொழிற்பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா : சாத்தான்குளம், எழுவரைமுக்கியில், சட்டமன்ற உறுப்பினர் சகோதரர் திரு. ஊர்வசி அமிர்தராஜ் அவர்கள் குறிப்பிடும் 100 ஏக்கர் பூமிதான நிலத்தோடு, அரசு புறம்போக்கு நிலங்கள் 300 ஏக்கர் உட்பட 400 ஏக்கர் நிலப் பரப்பில் புதிய சிப்காட் தொழிற்பூங்கா உருவாக்குவதற்கான சாத்தியக்கூறுகளை திராவிட நாயகன் அவர்களின் அரசு ஆராய்ந்து வருகிறது. தொழில்நுட்ப சாத்தியக்கூறுகள் இருப்பின், அங்கே ஒரு சிப்காட் அமைப்பதற்கான முயற்சிகளை அரசு நிச்சயமாக எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

செ. ஊர்வசி அமிர்தராஜ்: குலசேகரப்பட்டினம் ISRO ராக்கெட் ஏவுதளம் மற்றும் உடன்குடி அனல்மின் நிலையம் ஆகியவற்றிலிருந்து சாத்தான்குளம் தாலுகா, எழுவரைமுக்கி ஊராட்சி சுமார் 15 கி.மீ. தொலைவில் உள்ளது. அந்த எழுவரைமுக்கி ஊராட்சியில் அரசுக்குச் சொந்தமான இடம் சுமார் 300 ஏக்கர் நிலம் உள்ளது. அதைத் தொடர்ந்து பிடாநேரி மற்றும் ஏரல் தாலுகா, வெள்ளமடம் ஊராட்சியில் அரசுக்குச் சொந்தமாக ஆக மொத்தம் 800 ஏக்கர் நிலம் உள்ளது. இவ்விடங்களில் சிப்காட் அமைத்து, ராக்கெட் ஏவுதளம் மற்றும் அனல்மின் நிலையத்திற்குத் தேவையான உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் அமைக்க வேண்டும். அதற்கு அரசு முன்வருமா?

அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா: தூத்துக்குடி மாவட்டம் என்பது பிரதானமான மாவட்டம். நல்ல அற்புதமான சாலைகள், அற்புதமான இரயில் வசதி, மிக முக்கியமான துறைமுக வசதி ஆகியவை உள்ள ஒரு மகத்தான மாவட்டம். தொழில் துறையில் ஒரு மிகப் பெரிய வளர்ச்சியைக் கண்டுவரும் மாவட்டம். ஏறத்தாழ 3,890 ஏக்கர் பரப்பளவில், 4 சிப்காட்கள் ஏற்கெனவே அமைக்கப்பட்டு 108 நிறுவனங்கள் அங்குள்ள இலட்சக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கிக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர் கவிஞர் திருமதி கனிமொழி அவர்களும் அங்கு புதிய சிப்காட்களை உருவாக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்து வருகிறார். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த இடம் பிரதான சாலையிலிருந்து சற்று தள்ளி இருக்கிறது. Distance அதிகமாக இருப்பதால், அங்கு சாத்தியக்கூறுகள் இருப்பின், நிச்சயமாக TechnoEconomic Feasibility Report நன்றாக வருமேயானால், நிச்சயமாக அங்கு சிப்காட் அமைப்பதற்கான ஏற்பாடுகளை மாண்புமிகு திராவிட நாயகன் அவர்களின் அரசு நிச்சயமாக செய்யும்.

இங்கே தூத்துக்குடி மாவட்டத்தைப் பொறுத்தவரை, ஏற்கெனவே 4 SIPCOTகள் இருக்கின்றன. இன்னும் 3 SIPCOTகள் நில எடுப்பு நிலையில் உள்ளன. ஏறத்தாழ 5 ஆயிரம் ஏக்கர். அதைத்தாண்டி உத்தேசமாக 4 புதிய திட்டங்கள் இருக்கின்றன. இவை எல்லாமே நிறைவடைந்து விட்டால் தூத்துக்குடி மாவட்டத்திற்கு மட்டும் ஏறத்தாழ 10 SIPCOTகள் உருவாக்கும் பெருமை இந்த திராவிட

மாடல் நாயகர் அவர்களின் ஆட்சியைச் சாரும். இந்த ஆட்சியில் மட்டுமே ஏறத்தாழ 7 SIPCOTகள் உருவாக்குவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன.

செ. ஊர்வசி அமிர்தராஜ்: அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. அதேபோல, ஸ்ரீவைகுண்டம், ஏரல், கருங்குளம் ஆகிய பகுதிகளில் சுமார் 11 ஆயிரம் ஏக்கரில் வருடத்திற்கு 50 ஆயிரம் டன் வாழை விளைவிக்கப்படுகிறது. அவற்றைப் பயன்படுத்தி, பதப்படுத்தி, ஏற்றுமதி செய்ய cold storage facility அல்லது அவற்றை மதிப்புக்கூட்டல் பொருளாக மாற்றி, துகள்களாக்கி, அழகு சாதனப் பொருட்களாகவோ அல்லது ஊட்டச்சத்து பொருட்களாகவோ தயாரிக்க, தொழில் துறை மூலமாக அரசின் திட்டம் ஏதும் உள்ளதா என்பதை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா: அது SIDCO சம்பந்தப்பட்ட கேள்வி. இருந்தாலும் பதில் சொல்கிறேன். திராவிட நாயகன் அவர்கள் உலகத்தின் எந்தப் பகுதிக்குச் சென்றாலும் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் தொழில் வளர்ச்சிக்கான தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்குச் செல்லும்போதெல்லாம் பெரிய நிறுவனங்கள் மட்டுமல்லாமல், விவசாயப் பெருங்குடி மக்களின் விளைபொருட்களுக்கு மதிப்புக் கூட்டுதல் செய்து அதன்மூலம் ஒரு பெரிய வளர்ச்சியை விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் வழங்கும் அந்த வேளையில் திராவிட நாயகன் அவர்கள் இறங்கியிருக்கிறார்கள். நீங்கள் கூறியவாறு இந்த Banana Processingக்கு நிறைய நிறுவனங்கள் கேட்டிருக்கின்றன. ஏற்கெனவே, தேனியில் ஒரு சிறிய Processing unit போடுவதற்கான பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருக்கிறது. இங்கே நீங்கள் சொல்லும் அளவிற்கு 50 ஆயிரம் மெட்ரிக் டன் அளவிற்கு இருக்குமானால், நிச்சயமாக சாத்தியக்கூறுகள் குறித்து சிப்காட் நிறுவனமும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்களும், SIDCO வழியாகவும் அதைச் செய்வதற்கான சாத்தியக்கூறுகளை இந்த திராவிட நாயகன் அவர்களின் அரசு செய்யும்.

கூடுதல் தகவலாக திராவிட நாயகன் அவர்களின் அரசில்தான் தூத்துக்குடியில் மிகப்பெரிய வளர்ச்சிகள் தொடர்ந்து வந்துகொண்டே இருக்கின்றன. பேரவைத் தலைவர் அவர்களுக்கே இது நன்றாகத் தெரியும்.

16 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில் VinFast நிறுவனத்திற்கு மிகப்பெரிய ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் 2024 ஜனவரி மாதம் திராவிட நாயகன் அவர்கள் நடத்திய Global Investors Meet (GIM)-ல் மிகப்பெரிய கையெழுத்திடப்பட்டது. 16 ஆயிரம் கோடி முதலீட்டில், பல்லாயிரக்கணக்கான வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்று உறுதியளித்தோம். இதையெல்லாம் சொல்வார்கள், நடக்குமா என்று பலரும் அன்று கேட்டார்கள். ஜனவரி மாதம் புரிந்துணர்வு ஒப்பந்தம், பிப்ரவரி மாதம் அடிக்கல் நாட்டு விழா, இன்னும் ஒரே ஆண்டில், அதாவது, இந்த ஆண்டிற்குள்ளாகவே அங்கு அந்தத் தொழிற்சாலை அமைக்கப்பட்டு, எல்லோருக்கும் வேலைவாய்ப்பு வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் நமது திராவிட நாயகன் அவர்களின் வேகம், அந்த speed, அந்தத் துரிதமான உழைப்பிற்கு இதுவே ஒரு சான்று .

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

போஸ்ட் மெட்ரிக் – ப்ரீமெட்ரிக் கல்வி உதவித் தொகை பெற

குடும்ப ஆண்டு வருமான வரம்பை ரூ.8 லட்சமாக உயர்த்திடுக!

மாநிலங்களவையில் – பி.வில்சன் வலியுறுத்தல்!

புதுடெல்லி, மார்ச் 25 - போஸ்ட் - மெட்ரிக் மற்றும் ப்ரீ - மெட்ரிக் கல்வி உதவித்தொகையை பெறுவதற்கான குடும்ப ஆண்டு வருமான வரம்பினை ரூ.2.5 இலட்சத்தில் இருந்து ரூ.8 இலட்சமாக உயர்த்தக் கோரி மாநிலங்களவையில் பி.வில்சன் வலியுறுத்தினார்.

இதுகுறித்து அவர் பேசியதாவது :

எஸ்.சி., எஸ்.டி., மற்றும் ஓபிசி வகுப்பைச் சார்ந்தவர்கள், போஸ்ட்- மெட்ரிக் மற்றும் ப்ரீ- மெட்ரிக் கல்வி உதவித்தொகையை பெறுவதற்கான குடும்ப ஆண்டு வருமான வரம்பானது நெடுநாட்களாக ரூ.2.5 இலட்சம் என்ற அளவிலேயே இருந்து வருகிறது.

இந்த இரண்டு இலட்சம் என்கிற வருமான வரம்பானது, இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நுகர்வோர் விலைக் குறியீட்டுடன் இணைந்த திருத்தங்களை செய்யலாம் என்ற வீதிமுறையின் கீழ் 2010 ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட வழிகாட்டுதல்களின் அடிப்படையில் நிர்ணயிக்கப் பட்டது.

அந்த வகையில் திருத்தமானது கடைசியாக கடந்த 2013 ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. அதன் பின்னர், கல்விச் செலவுகள் மற்றும் பணவீக்கம் அதிகரித்த போதிலும், வருமான உச்சவரம்பு மற்றும் உதவித்தொகைகள் மாற்றம் காணாமல் உள்ளன.

மாறாக, இந்திய அரசாங்கமானது சமீபத்தில் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்கான (EWS) வருமான வரம்பினை ரூ.8 இலட்சமாக உயர்த்தியுள்ளது.

இதேபோன்று எஸ்.சி., எஸ்.டி மாணவர்களுக்கான தேசிய வெளிநாட்டு கல்வி உதவித்தொகை மற்றும் உயர்தர கல்வித்திட்டம் போன்ற திட்டங்களுக்கான வரம்பு ரூ.8 இலட்சமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

ஆனால், போஸ்ட்-மெட்ரிக் மற்றும் ப்ரீ-மெட்ரிக் உதவித்தொகை திட்டங்களுக்கு இந்த வரம்பு உயர்த்தப்படவில்லை. இதனால் பின்தங்கிய நிலையிலிருக்கும் ஏராளமான தகுதி படைத்த மாணவர்கள் இந்த உதவித் தொகையை பெறமுடியவில்லை.

உயர்கல்வி குறித்த அகில இந்திய கணக்கெடுப்பின் அறிக்கையின்படி, எஸ்.சி மற்றும் எஸ்.டி மாணவர்களின் மொத்த சேர்க்கை விகிதமானது, மற்றவர்களை விட மிகவும் பின்தங்கியுள்ளது.

இந்த இடைவெளியைக் குறைப்பதிலும், உயர்கல்விக்கான சமமான அணுகலை உறுதி செய்வதிலும் நாம் தீவிரமாக இருக்கிறோம் என்றால், கல்வி உதவித்தொகைக்கான வருமான உச்சவரம்பு உயர்த்தப்பட வேண்டும்.

எனவே, போஸ்ட் - மெட்ரிக் மற்றும் ப்ரீ - மெட்ரிக் கல்வி உதவித்தொகையை பெறுவதற்கான குடும்ப ஆண்டு வருமான வரம்பினை ரூ.2.5 இலட்சத்தில் இருந்து ரூ.8 இலட்சமாக உயர்த்த ஒன்றிய அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்!

இவ்வாறு பி.வில்சன் அவர்கள் பேசினார்.